அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள குறைதீர்க்கும் நாள் கூட்ட அரங்கத்தில் 15.10.2010 அன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்

திட்டத்தின் பெயர்

தி/ள் டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் நிறுவனத்தின் சார்பாக அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம் அமீனாபாத் மற்றும் கைருலாபாத் கிராமத்தில 95.34.5 ஹெக்டேர் பரப்பளவில் ஆண்டொன்டிற்கு 0.30 மில்லியன் டன்னிலிருந்து 1.10 மில்லியன் டன்னாக உற்பத்தி அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கம் விரிவாக்கம்.

கலந்து கொண்ட அலுவலர்கள்

1. திரு.தி.க.பொன்னுசாமி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட நடுவர், அரியலூர் மாவட்டம்.
2. திரு.அ.ரெங்கசாமி, எம்.இ.,
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ)
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்இ திருச்சிராப்பள்ளி
3. திருமதி.ஆர்.ஜீவரெத்தினம், கோட்டாட்சியர், அரியலூர்

சிறப்பு விருந்தினர்

திரு. பாளை து.அமரமூர்த்தி,
மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர், அரியலூர் மாவட்டம்.

திட்டத்தின் சார்பாக கலந்து கொண்டவர்கள்:

1. திரு.ஜே.வி.குங்குனே,
   செயல் இயக்குநர், தி/ள்.டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்
2. திரு.ஆர்.எ. கிருஷ்ணகுமார்,
   துணை செயல் இயக்குநர், தி/ள்.டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்
3. திரு வீ.கார்த்திகேயன்,
   முதுநிலை பொது மேலாளர் (சுரங்கம்), தி/ள்.டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்
4. திரு.பி.சுந்தரராஜன்,
   பொது மேலாளர் (கூட்டாண்மை அலுவலர்) தி/ள்.டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்
5. திரு.எஸ்.மகேஷ்,
   துணை பொது மேலாளர் (சுரங்கம்) தி/ள்.டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்
6. திரு.ஆர்.ராஜமோகன்
   துணை பொதுமேலாளர், தி/ள்.டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்
7. திரு.ஈ.வாசுதேவன், சுரங்க மேலாளர்,
   தி/ள்.டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்
8. திரு.கே.சேகர், திட்ட ஆலோசகர்
   தி/ள்.என்சிஸ்கான் என்விரான்மெண்டல் கன்சல்டென்ட், சென்னை

கலந்து கொண்ட பொதுமக்கள்:

1. திரு.ஈ.நாகராஜன், காட்டுபிரிஞ்சியம்
2. திரு.எ.செல்வநாதன், ஆலம்பாக்கம்
3. திரு.ஆர்.சந்திரசேகர், கல்லக்குடி
4. திரு.ஆர்.திருமலை, வடுகர்பேட்டை
5. திரு.டி.செந்தில்குமார், கோட்டியால்
6. திரு.எ.தமிழ்மணி, காட்டுபிரிஞ்சியம்
7. திரு.சி.மூர்த்தி, ராஜிவ்நகர், அரியலூர்
8. திரு.என்தேவேந்திரன், ரெட்டிப்பாளையம்
9. திரு.ப.முனியமுத்து, ஊராட்சி மன்ற துணைத் தலைவர், சின்னநாகலூர்.
10. திரு.டி.பழனிமுருகன், காட்டுபிரிஞ்சியம்
11. திரு.பி.இராமகிருஷ்ணன், காட்டுபிரிஞ்சியம்
12. திரு.எம்.ராஜலிங்கம், காட்டுபிரிஞ்சியம்
13. திரு.ஜி.நீலமேகம், காட்டுபிரிஞ்சியம்
14. திரு.ந.ஜெய்சங்கர், வெளிப்பிரிஞ்சியம்
15. திரு.டி.இளவரசன், காட்டுபிரிஞ்சியம்
16. திரு.ஆர்.பழனிச்சாமி, காட்டுபிரிஞ்சியம்
17. திரு.எஸ்.கலைங்கர், காட்டுபிரிஞ்சியம்
18. திரு.எம்.செல்வராஜ், காட்டுபிரிஞ்சியம்
19. திரு.ஆர்.முருகானந்தம், சின்னமணக்குடி
20. திரு.கே.சாமிநாதன், பெரியநாகலூர்

21. திரு.பி.வேலுசாமி, காட்டுபிரிஞ்சியம்
22. திருமதி.கெ.கல்கி, காட்டுபிரிஞ்சியம்
23. திரு.பி.நல்லதம்பி, காட்டுபிரிஞ்சியம்
24. திருமதி.த.செல்வி, காட்டுபிரிஞ்சியம்
25. திருமதி.செ.ராஜகுமாரி, காட்டுபிரிஞ்சியம்
26. திருமதி.சி.தேன்மொழி, காட்டுபிரிஞ்சியம்
27. திருமதி.தவமணி, காட்டுபிரிஞ்சியம்
28. திரு.வி.தங்கராசு, காட்டுபிரிஞ்சியம்
29. திரு.எம்.கோவிந்தசாமி, காட்டுபிரிஞ்சியம்
30. திரு.பி.இராஜேந்திரன், காட்டுபிரிஞ்சியம்
31. திரு.இரா.தெய்வசிகாமணி, இடையாத்தான்குடி
32. திருமதி.எஸ்.சீதா, மணகுடி
33. திருமதி.கே.ஜெகதாம்பாள், சின்னமனக்குடி
34. திருமதி.சு.கமலம், சின்னமனக்குடி
35. திருமதி.மு.லெட்சுமி, சின்னமனக்குடி
36. திருமதி.கொ.காத்தாய்யி, காட்டுபிரிஞ்சியம்
37. திரு.ஆர். பாஸ்கரன், தலைவர், மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புசங்கம், அரியலூர்
38. திரு.எ.ஜி.சூரியப்பிரகாசம்,செயலாளர், மாவட்டசுற்றுச்சூழல்பாதுகாப்பு குழு, அரியலூர்
39. திரு.எஸ்.சுசீந்தர், செயலாளர், சுற்றுச்சூழல்பாதுகாப்பு விழிப்புணர்வு இயக்கம், கல்லக்குடி
40. திரு.ஆர்.முத்துசாமி,வெங்கடகிருஷ்ணாபுரம்
41. திரு.கே.அப்துல்ரஹீம், தலைவர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு, டால்மியாபுரம்
42. திரு.கே.அருணாச்சலம், டி.சி.என்.டபிள்யூ. பொது செயலர்,டால்மியாபுரம்.
43. திரு.என்.இளங்கோவன், துணைத் தலைவர், புள்ளம்பாடி, டால்மியாபுரம்
44. திரு.சி.மாணிக்கம், ஊராட்சிமன்றத் தலைவர், பளிங்காநத்தம்
45. திரு.கோ.வளர்மாறன், கயர்லாபாத்
46. திரு.எம்.மருதமுத்து, கயர்லாபாத்
47. திரு.ஆர்.முத்துசாமி, கயர்லாபாத்
48. திரு.எஸ்.ஆர்.தசரதன், அரியலூர்
49. திரு.கே.கல்யாணராமன், அரியலூர்
50. திரு எம்.கோகிலன், கல்லக்குடி
51. திரு.ஆர்.முருகானந்தம், செந்துறை
52. திரு.மு.முத்தமிழ்ச்செல்வன், கீழமாளிகை
53. திரு. டி.பால்ராஜ், விழுப்பனங்குறிச்சி
54. திரு.எஸ்.பிலோமின்ராஜ், வடுகர்பேட்டை
55. திரு.கிரிஹரி, தலைவர், வடுகர்பேட்டை
56. திருமதி.எஸ்.சாந்தா, தலைவர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு இயக்கம். டால்மியாபுரம்
57. திருமதி.எஸ்.மதலைமேரி, வடுகர்பேட்டை
58. திருமதி.பி.அன்னம்மாள், வடுகர்பேட்டை
59. திரு.ஜி.குமார், செந்துறை
60. திரு.பி.சந்திரசேகரன், விழுப்பனங்குறிச்சி
61. திரு.பவுல்ராஜ், டைலர், வடுகர்பேட்டை
62. திரு.ஜி.ஆரோக்கியதாஸ், கல்லக்குடி
63. திரு.என்.செங்கமுத்து, தலைவர், அரியலூர் மாவட்ட விவசாய சங்கம், கயர்லாபாத்
64. திரு.ஆர்.சாமிநாதன், காட்டுபிரிஞ்சியம்
65. திரு.பி.சுப்பிரமணியன், சின்னமணக்குடி
66. திரு.டி.வேல்முருகன், காட்டுபிரிஞ்சியம்
67. திரு.கே.தமிழ்செல்வம், சின்னமங்களுர்
68. திரு.ஆர்.ராமலிங்கம், முன்னாள் ஊராட்சி தலைவர், கோலேரிராயபுரம், (கயர்லாபாத்)
69. திரு.இரா.தமிழ்மணி, ஐ.என்.டி.யூ.சி, மாவட்ட தலைவர், அரியலூர்
70. திரு.ஆர்.சிற்றம்பலம், சி.ஐ.டி.யூ. மாவட்ட தலைவர், அரியலூர்
71. திரு.எ.ஆறுமுகநைனார், உதவிஇயக்குனர், புவியியல் மற்றும் கனிமம், அரியலூர்
72. திரு.டி.ராஜசேகர், கல்லக்குடி
73. திரு.ஆர்.தெய்வேந்திரன், மாவட்ட செயலாளர், பெரம்பலூர்
74. திரு.எ.பி.இராஜேந்திரன், இந்தியன் மனித உரிமை ஒருங்கினைப்பாளர், அரியலூர்
75. திரு.எ.சாரங்கப்பன், முன்னாள் ராணுவத்தினர், தேசீய மனித உரிமை ஒருங்கிணைப்பாளர்
76. திரு.எ.ஆர்.அக்பர்ஷெரீப், அரியலூர்
77. திரு.இராம.ஜெயவேல், தேசிய முன்னேற்ற திராவிட கழக மாவட்ட செயலாளர், அரியலூர்

78. திரு வி.மதி, அரியலூா்
79. திரு.எஸ்.ஆா். ஸ்ரீதா், நகரத்தலைவா், இந்திய தேசிய காங்கிரஸ், அரியலூா்
80. திரு.வ.செல்வக்குமாா், மாவட்ட ஊராட்சி துணை தலைவா், அரியலூா்
81. திரு.ரெ.வெங்கடேசன், இளையோா் நலச்சங்கம், அரியலூா் மாவட்டம்
82. திரு.எஸ்.எம்.சந்திரசேகா், கவுன்சிலா், அரியலூா்
83. திரு.பொ.செந்தில்குமாா், செந்துறை
84. திரு.பி.சேகா், விழுப்பனங்குறிச்சி

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளா், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருச்சி அவா்கள் மாவட்ட ஆட்சித்தலைவா், சட்டமன்ற உறுப்பினா் மற்றும் திருவாளா்கள். டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் நிறுவனத்தின் பிரதிநிதிகள், பத்திரிக்கையாளா்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரை வரவேற்றுப் பேசினாா்.

மேலும் தி/ள். டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் நிறுவனத்தாா் அரியலூா் வட்டம் அமீனாபாத் மற்றும் கைருலாபாத் கிராமங்களில் 95.345 ஹெக்டோ் பரப்பளவில் தற்போது மேற்கொண்டுவரும் ஆண்டொன்றிற்கு 0.30 மில்லியன் டன்னிலிருந்து 1.10 மில்லியன் டன்னாக சுண்ணாம்புக்கல் உற்பத்தி செய்ய விரிவாக்க பணிகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாக தெரிவித்தாா். இந்நிறுவனத்தாா் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், புதுடில்லி அவா்களிடம் சுற்றுச்சூழல் அனுமதிக்காக விண்ணப்பித்தபோது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின்படி பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்த அறிவுறுத்தப்பட்டது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் 10.09.2010 அன்று வெளியான தமிழ் நாளிதழான ’ தினத்தந்தி’ மற்றும் ஆங்கில நாளிதழான ‘நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளிதழ்களில் இந்த சுரங்க விரிவாக்கம் தொடா்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இந்த சுரங்க விரிவாக்கம் மேற்கொள்வது சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்து எவ்வித கருத்துக்கள், நோக்கங்கள் எதுவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பொது அறிவிப்பு வெளியிட்ட பிறகு பெறப்படவில்லை என தெரிவித்தாா். பின்னா் நிறுவனத்தின் பிரதிநிதிகளை இந்த சுரங்க விரிவாக்கம் குறித்து விளக்குமாறு கூறினாா்.

திரு. மகேஷ், துணை பொது மேலாளா் (சுரங்கம்), டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் அவா்கள்

- தி/ள். டால்மியா சிமெண்ட் நிறுவத்தின் கீழ் இயங்கிவரும் சிமெண்ட் தொழிற்சாலைகள் பற்றி விவரித்தாா். மேலும் அவா் மேற்கண்ட நிறுவனம் பெற்றுள்ள இந்திய தரநிா்ணய சான்றிதழ்களான 9001, 14001,18001 பற்றி தெரிவித்தாா்.
- தி/ள். டால்மியா சிமெண்ட் நிறுவனம் டால்மியாபுரத்தில் ஆண்டொன்டிற்கு 2.41 மில்லியன் டன் உற்பத்தி செய்யும் சிமெண்ட் ஆலை ஒன்றும் மற்றும் அரியலூாில் ஆண்டொன்டிற்கு 2.0 மில்லியன் டன் உற்பத்தி செய்யும் சிமெண்ட் ஆலை ஒன்றையும் நிறுவி இயக்கி வருகிறது. இதற்கு 8.0 மில்லியன் டன் சுண்ணாம்புக்கல் தேவைப்படுகிறது. கல்லக்குடி, கோவண்டக்குறிச்சி, பெரியநாகலூா் அமீனாபாத், கைருலாபாத் மற்றும் பெரியநாகலூாில் அமைந்துள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள் ஆண்டொன்டிற்கு 4.6 மில்லியன் டன் சுண்ணாம்புக்கற்களை அளித்து வருகிறது. மீதமுள்ள தேவையை பூா்த்தி செய்ய தற்போது வரிவாக்க பணிகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.
- அமீனாபாத் மற்றும் கைருலாபாத் சுரங்கங்களில் 95.345 ஹெக்டோ் பரப்பளவில் தற்போது ஆண்டொன்டிற்கு 0.30 மில்லியன் டன் உற்பத்தி செய்து வருகிறது. அவற்றை 1.10 மில்லியன் டன்னாக அதிகாிக்க இந்திய சுரங்க நிா்ணயித்தின் 18.3.2008 நாளிட்ட கடிதம் வாயிலாக அனுமதி பெறப்பட்டுள்ளது.
- சுண்ணாம்புக்கல் திட்ட அமைவிடம், நிலஅமைப்பு பற்றி விவரித்தாா். மேலும் 10 கி.மீ. சுற்றளவில் தேசிய பூங்கா, வரலாற்று/தொல்லியல் நினைவுச் சின்னங்கள் எதுவும் அமைந்திருக்கவில்லை என தெரிவித்தாா். மேலும் மருதையாறு 6.5கி.மீ. தொலைவிலும் கல்லாறு அருகாமையிலும் செல்வதாக தெரிவித்தாா்.
- சுண்ணாம்புக்கல் சுரங்கத்தில் திறந்த நிலை அகழ்வு முறை பின்பற்றப்படுகிறது. மேலும் துளையிடுதல் மற்றும் வெடித்தல் முறையில் சுண்ணாம்புக்கல் எடுக்கப்படுகிறது. மேலும் அப்பகுதியில் நீா்மட்டம் 45மீட்டா் ஆழத்தில் இருப்பதாகவும் ஆனால் சுரங்கம் 28மீட்டருக்கு மட்டுமே வெட்டப்படுவதாலும் நீா் மட்ட அளவில் பாதிப்பு எதுவும் நிகழாது. தூசி சேகாிப்பான் மூலம் துளையிடும் பகுதியில் ஏற்படும் தூசுகள் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் தூசுகள் வெளியேறும் பகுதியில் நீா்தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. சுண்ணாம்புக்கல் ஏற்றி செல்லும் லாாிகள் தாா்பாய்கள் கொண்டு மூடப்படுகிறது.
- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடத்திய காற்று மாசு மற்றும் ஒலி மாசு குறித்த அறிக்கைகள் வாரியம் நிா்ணயித்த அளவிற்குள் உள்ளது.

• இந்நிறுவனம் சமுக முன்னேற்றத்திற்காக பல்வேறு சமுக நல பணிகளை ஆண்டொன்றிற்கு ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் செய்து வருவதாக தெரிவித்தார்.

• இந்த சுண்ணாம்புக்கல் சுரங்கம் மூலம் சுற்றுச்சூழல் கண்காணிப்பு பணிக்கு ரூ.5.0 லட்சமும் சமூக பணிகளுக்கு ரூ 8.0 லட்சமும் ஒதுக்கீடு செய்து உள்ளதாக தெரிவித்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், உத்தேசிக்கப்பட்டுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்க விரிவாக்கம் பற்றி பொது மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**1.** திரு. என்.செங்கமுத்து, தலைவர், மாவட்ட விவசாயிகள் சங்கம், கைருலாபாத்

அரியலூர் பகுதி சுண்ணாம்புக்கல் மிகுந்து காணப்படும் பகுதியாகும். இதனால் சிமெண்ட் தொழிற்சாலைகள் பயன் அடைகிறது. ஆனால் மக்களின் வாழ்க்கை தரம் உயரவில்லை. தி/ள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திலிருந்து வெளியேறும் தூசுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கம் தரமான சாலையை அமைத்தது. அது தற்போது 25லிருந்து 50 டன்வரை சுண்ணாம்புக்கல் ஏற்றி செல்லும் லாரிகளால் பழுதடைந்துள்ளது. தி/ள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் நிலம் கொடுத்தவர்களுக்கு வேலை கொடுத்தது. ஆனால் தனியார் நிறுவனங்கள் அவ்வாறு செய்யவில்லை. மேலும் கையிருலாபாத் கிராமத்திற்கு சாலை வசதிகள் இல்லை அவற்றை மாவட்ட நிர்வாகத்துடன் கலந்து மேற்கொள்ள கேட்டுகொண்டார். மேலும் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க கேட்டுக்கொண்டார்.

2.திரு சிவசெல்வகுமார், பஞ்சாயத்து துணை தலைவர், அரியலூர்

அரியலூர் பகுதியில் 7 தனியார் சிமெண்ட் தொழிற்சாலைகள் உள்ளன. ஆனால் உள்ளூர் மக்கள் எவரும் வேலைக்கு அமர்த்தப்படவில்லை. மேலும் உள்ளூர் மக்களுக்கு மாவட்ட நிர்வாகத்துடன் கலந்து வேலைவாய்ப்பு அளிக்க கேட்டுகொண்டார்.

3.திரு ஆர் பாஸ்கரன், தலைவர் நுகர்வோர் பாதுகாப்பு மையம், அரியலூர்

இந்நிறுவனம் முதலில் சிமெண்ட் ஆலை அமைப்பதற்கும், பிறகு மின் உற்பத்தி நிலையம் அமைக்கவும் தற்பொழுது சுண்ணாம்புக்கல் சுரங்க விரிவாக்கத்திற்க்கும் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை நடத்துகிறது. நிலத்தடி நீரை உறிஞ்சுவதால் நிலத்தடி நீர் மட்டம் குறையும் நிலை உள்ளது. சிமெண்ட் தொழிற்சாலைகளினால் அரியலூரில் உள்ள பொது மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறார்கள். சுண்ணாம்புக்கல் சுரங்கங்களின் கழிவு மண்களை 60அடி உயரத்திற்கு சேமிப்பதால் ஏற்படும் தூசுகளால் அருகில் உள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகிறது. மேலும் தூசியை கட்டுப்படுத்த முறையாக தண்ணீர் தெளிப்பதில்லை. எனவே அருகில் உள்ள நிலங்களின் உரிமையாளர்கள் நிலங்களை நிறுவனத்திற்கு விலைக்கு விற்பதற்கான சூழ்நிலை ஏற்படுகிறது. சுண்ணாம்புக்கல் ஏற்றிச் செல்லும் லாரிகள் 25 முதல் 45 டன் வரை ஏற்றுவதால் சாலைகள் பாதிப்படைகின்றன. மரங்கள் வளர்ப்பது சம்மந்தமாக ஒரு குழு அமைக்க கேட்டுக்கொண்டார். சமூக மேம்பாடு தொடர்பான திட்டங்களை செயல்படுத்தும் பொழுது மாவட்ட நிர்வாகத்துடன் கலந்து நிறைவேற்றும்படி கேட்டுக்கொண்டார். கல்லக்குடி மற்றும் கோவண்டக்குறிச்சி சுண்ணாம்புக்கல் சுரங்கங்களை மீண்டும் நிரப்பப்படாததால் பொது மக்களுக்கு சிரமமாக உள்ளது. மேலும் சுண்ணாம்பு கல் சுரங்க விரிவாகத்தினால் கூடுதல் வேலை வாய்ப்பு எவ்வாறு ஏற்படும் என்று வினவினார். சமூக பணிகளை மேற்கொள்ளும் பொழுது மாவட்ட நிர்வாகத்ததுடன் கலந்து மேற்கொள்ளுமாறும் நிறுவனங்கள் தனியாக மேற்கொள்ள வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார். அவர் உத்தேசித்துள்ள சுண்ணாம்புக்கல் சுரங்க விரிவாக்கம் செய்ய ஆட்சேபனை தெரிவித்தார்.

4.ஆர். திருமலை, வடுகர்பேட்டை

சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைந்துள்ள பகுதி தரிசு நிலம் ஆகும். அங்கு விவசாய பணி ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் சுரங்கத்தில் பணிபுரியும் அனைவரும் நிரந்தர பணியாளர்கள் எனவும் இந் நிறுவனம் ஆண்டொன்றிற்கு 5000 மரக்கன்றுகளை நடுவதாகவும் தெரிவித்தார்.

இவர் தி/ள் டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிட்டெ நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளராக இருப்பதால் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் நிறுவனத்தின் தொழிலாளர்கள் இக் கூட்டத்தில் பேசக் கூடாது என தெரிவித்தார். மேலும் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்க விரிவாக்க பகுதியை சேர்ந்த பொது மக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டார்.

5. எ.பி.இராஜேந்திரன், இந்திய மனித உரிமைக் கழகம், அரியலூர்

இந்நிறுவனம் தொடர்ந்து வலியுறுத்தியும் வேலை வாய்ப்பு தரவில்லை என கூறினார். மேலும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் எந்த வித அழைப்புக் கடிதமும் வரவில்லை. இந்நிறுவனத்தில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டதைப் பற்றிய விவரங்களை கேட்டார். அரியலூர் பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் குறைந்த பட்சம் 1000 இளைஞர்களுக்காவது மாண்புமிகு முதலமைச்சரின் வருகையின் போது வேலை வாய்ப்பு வழங்கவேண்டும் என கேட்டுக் கொண்டார். மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு

வாரியத்தின் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அலுவலகத்தை அரியலூரில் அமைக்க கேட்டுக்கொண்டார். அரியலூர் மக்களுக்கு சலுகை விலையில் சிமெண்ட் வழங்க கேட்டுக்கொண்டார்.

6.திரு.ரெ.வெங்கடேசன், அரியலூர்.

அரியலூரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க புறவழிச்சாலை அமைக்கப்பட்டது. ஆனால் இச் சாலையில் சுண்ணாம்புக்கல் ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களால் போக்குவரத்து நெரிசல் குறையவில்லை. அதிக பாரங்களை எற்றி செல்லும் லாரிகளால் சாலைகள் பழுதடைகின்றன. நிறுவனங்கள் ஒப்பந்த தொழிலாளர்களை நியமிப்பதால் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இதனால் ஒப்பந்த தொழிலாளர்கள் பயன் அடைகிறார்கள்.

7.திரு.ஆர்.தமிழ்மணி, மாவட்ட தலைவர், ஐ.என்.டி.யூ.சி. அரியலூர்

தி/ள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் நாள் ஒன்றுக்கு 1500 டன் சிமெண்ட் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப்பட்டது. அந்நிறுவனம் 1500 நபர்களுக்கு வேலை வாய்ப்பை அளித்தது. தனியார் சிமெண்ட் நிறுவனங்கள் அதிகம் லாபம் பெறுகின்றன. ஆனால் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவில்லை. சுண்ணாம்புக்கல் சுரங்கங்களால் அரியலூர் பகுதி கடலாக மாறும். மேலும் சுண்ணாம்புக்கல் சுரங்கங்களிலிருந்து சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு சுண்ணாம்புகற்களை எடுத்து செல்ல தனியாக சாலை அமைக்கலாம் என கருத்து தெரிவித்தார். ச மூக பணிகளை நல்ல முறையில் செயல்படுத்துவதில்லை என தெரிவித்தார்.

8.திரு.எஸ்.எம்.சந்திரசேகர், கவுன்சிலர், அரியலூர்

அரியலூர் பகுதியின் சுற்றுச்சூழல் அதிகமான வாகன போக்குவரத்தால் பாதிக்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் உள்ளாட்சி அமைப்பு ஏற்படுத்தும் தீர்மானங்களை நிறைவேற்றுவதில்லை. ரூபாய் 50.00 லடசம் செலவில் முன்று நிறுவனங்களால் சாலை அமைக்கப்பட்டது. அரியலூருக்கு தேவையான சாலை வசதி மற்றும் தண்ணீர் வசதி மாவட்ட நிர்வாகத்தால் செய்ய வேண்டும் எனவும் தனியார் நிறுவனங்கள் மேற்கொள்ளக்கூடாது எனவும் தெரிவித்தார். மேலும் நிறுவனங்கள் அதிக மரங்களை நடவேண்டும் எனவும் மருத்துவ முகாம்களை பயிற்சி பெற்ற மருத்துவர்களை கொண்டு செய்யவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

9.எ.ஆர்.அக்பர்செரீப்,அரியலூர்

நிறுவனம் மேற்கொள்ளவிருக்கும் சுண்ணாம்புக்கல் சுரங்க விரிவாக்க பணியினை வரவேற்றார். மாவட்டத்திற்கு சிமெண்ட் நிறுவனங்களால் அதிக வருமானம் வருகிறது எனவும் சுரங்கப்பணிகளை சட்டவிதிகளுக்கு உட்பட்டு நடத்துமாறு கேட்டுக்கொண்டார். சமூக பணிகளை மாவட்ட நிர்வாகத்திடம் தெரிவித்துவிட்டு நிறுவனங்கள் மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

10திரு.கோ.வளர்மாறன்,கைருலாபாத்

சுண்ணாம்புக்கல் கற்கள் வெட்டி எடுப்பதற்க்கான உரிமத் தொகையை ஊராட்சிக்கு வழங்கினால் அதை கொண்டு ஊராட்சி பகுதிகள் வளர்ச்சி பெறும் எனத் தெரிவித்தார்.

11.திரு.டி.செந்தில்குமார், அரியலூர்

சுற்றுப்புறச்சூழல் மாசுவை கட்டுப்படுத்த அதிகமான மரங்களை வளர்க்கவும் நிர்வாகத்திற்கு நிலங்களை கொடுத்தவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்படி கேட்டுக் கொண்டார். சுண்ணாம்புக்கல்லை அதிகமாக ஏற்றிச் செல்லும் லாரிகளை வட்டார போக்குவரத்து அலுவலர் கண்காணிக்க வேண்டும். மேலும் ஒப்பந்த தொழிலாளர்களை தவிர்த்து நிரந்தர பணியாளர்களை நியமிக்க வேண்டுமாய் கேட்டுக் கொண்டார்.

12.திருமதி.கொ.காத்தாயி, காட்டுப்பிரிஞ்சியம்

இந்நிறுவனம் சுண்ணாம்புக்கல் சுரங்கத்தில் வெடி வைக்கும் போது பாதுகாப்பு காரணங்களை கருத்தில் கொண்டு முன்கூட்டியே அறிவிக்கிறார்கள். அவர் உத்தேசிக்கப்பட்டுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்க விரிவாக்க பணிகளை வரவேற்றார்.

13.திரு.பி.சேகர்,வெளிப்பிரிஞ்சியம்

சிமெண்ட் நிறுவனங்கள் இப்பகுதிக்கு வருவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக தீவிரவாதிகளின் செயல்பாடுகள் அதிகமாக இருந்ததாகவும் தற்பொழுது சிமெண்ட் நிறுவனங்கள் வேலை வாய்ப்பு அளித்து உள்ளதால் அதுபோன்ற நடவடிக்கைகள் குறைந்திருப்பதாக தெரிவித்தார்.

14.திரு.ஆர்.சிற்றம்பலம், மாவட்ட தலைவர், சி.ஐ.டி.யு, அரியலூர்

அமீனாபாத் மற்றும் கைருலாபாத் கிராமங்களில் கரும்பு மற்றும் நெல் பயிரிடப்படுவதாகவும் சுண்ணாம்புக்கல் சுரங்க பகுதியில் வாழும் மக்களின் குறைகளை நிறுவனங்கள் களையவேண்டும் என கேட்டுக் கொண்டார். சுண்ணாம்புக்கல் ஆழமாக வெட்டி எடுப்பதால் அப்பகுதியின் நீர் மட்டம் குறைகிறது எனவும் லாரிகளில் அதிக பாரங்களை ஏற்றி செல்வதை தவிர்க்க வேண்டும் எனவும் லாரிகள் தார்பாய்கள் கொண்டு மூடி சுண்ணாம்புக்கற்களை எடுத்து செல்லவேண்டும் என கேட்டுக்கொண்டார். சிமெண்ட்டின் விலை அதிகமாக உள்ளது. அரியலூரின் பேருந்து நிலையத்தின் சுகாதார நிலைமை மோசமாக இருப்பதாக தெரிவித்து ஏதாவது ஒரு சிமெண்ட் நிறுவனம் பேருந்து நிலையத்தை பராமரிக்க கேட்டுக் கொண்டார்.

திரு.வி.கார்த்திகேயன், முதுநிலை பொதுமேலாளர் (சுரங்கம்), தி/ள்.டால்மியா சிமெண்ட்(பாரத்) லிமிடெட்,

மேற்கூறியவற்றிற்கு முதுநிலை பொது மேலாளர் (சுரங்கம்) கீழ்க்கண்டவாறு தனது பதில் உரையில் தெரிவித்தார்.

1. காட்டுபிரிஞ்சியம், அஸ்தினாபுரம் மற்றும் வாலாஜாநகரம் பகுதிகளில் உள்ள 30 நபர்களுக்கு நிறுவனத்தில் நிரந்தர பணி வழங்கப்பட்டிருப்பதாகவும் மேலும் சமீப காலத்தில் பயிற்சிக்கு பிறகு 9 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் நேர்முக மற்றும் மறைமுக வேலையாட்கள் அருகில் உள்ள கிராமங்களிலிருந்து பணியமர்த்தப்படுகிறார்கள்.

2. தி/ள். டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் நிறுவனம் நெடுஞ்சாலை துறைக்கு சுண்டக்குடி-பொய்யூர் தார் சாலை அமைக்க ரூ.2.80 கோடி அளித்துள்ளதாகவும் அரியலூர் நகரப்பகுதியில் சாலைகளின் மேம்பாட்டிற்க்காக ரூ.10.00 லட்சம் வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார். கல்லக்குடி பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதியில் சாலையை மேம்படுத்த நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நிதி வழங்கியுள்ளதாக தெரிவித்தார். மேலும் சமூக பணிகளை மாவட்ட நிர்வாகத்துடன் கலந்து மேற்கொள்ள சம்மதம் தெரிவித்தார்.

3. சுண்ணாம்புக்கற்களை எடுப்பதற்காக டன் ஒன்றிற்கு ரூ.63 உரிமத்தொகையாக அரசுக்கு செலுத்துவதாக தெரிவித்தார். தற்போது 15 மீட்டர் ஆழத்திற்கு சுண்ணாம்புக்கற்கள் வெட்டி எடுக்கப்பட்டதாகவும் மேலும் 13 மீட்டர் ஆழத்திற்கு வெட்டி எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

4. சுண்ணாம்புக்கல் சுரங்கம் நிரப்பும் பணிகளில் உத்தேசிக்கப்பட்ட 18 ஹெக்டேரில் ஒரு பகுதியாக இதுவரை 5 ஹெக்டேர் முடிக்கப்பட்டதாக தெரிவித்தார். மீதமுள்ள சுரங்க பள்ளங்கள் நீர்த்தேக்க குளங்களாக இந்திய சுரங்க நிர்ணயத்தின் ஒப்புதலின்படி மாற்றப்படும்.

5. பொதுமக்கள் தெரிவித்தப்படி முறையாக தண்ணீர் தெளிக்கும் பணிகளும் லாரிகளை தார்பாய் கொண்டு மூடவும் மரங்கள் வளர்க்கும் பணிகளும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

திரு.பாளை து.அமரமூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர், அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்ட அனைவரையும் வரவேற்றார். பின் தி/ள் டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் நிறுவனத்தாரை நிலங்களை கொடுத்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க கேட்டுக்கொண்டார். 1996ம் ஆண்டு சட்ட மன்ற உறுப்பினராக இருந்தபோது ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 100 வீடுகளை கட்டி கொடுக்க தி/ள். டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் நிறுவனம் மட்டுமே முன்வந்ததாக தெரிவித்தார். இந்நிறுவனம் அருகிலுள்ள கிராமங்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுக்கும் எனவும் கிராம மக்கள் அவர்களை அணுகலாம் எனவும் தெரிவித்தார். அரியலூரில் உள்ள கல்லூரி சாலை அமைக்கப்பட்டது. மேலும் தி/ள். டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் நிறுவனம் ரூ.2.80 கோடி நிதி உதவி செய்து சுண்டக்குடி-பொய்யூர் சாலை மேம்படுத்தப்பட்டது. மேலும் சுரங்கங்களுக்கு அருகில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு, சாலை வசதி மற்றும் குடிநீர் வசதிகளை நிறுவனத்தார் செய்து தரும்படி கேட்டுக்கொண்டார். இறுதியாக சுண்ணாம்புக்கல் சுரங்க விரிவாக்க பணிகளை வரவேற்றார்.

முடிவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கீழ்க்கண்ட விபரங்களை தெரிவித்தார்

1. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலானோர் இவ்விரிவாக்க திட்டத்தை வரவேற்றார்கள்.

2. தி/ள். டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட், உள்ளுர் மக்களுக்கு தேவையான பயிற்ச்சிகளை கொடுத்து வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

3. கிராமங்களுக்கு தேவைப்படும் அடிப்படை வசதிகளான மருத்துவ வசதி, சாலை, குடிநீர் மற்றும் தெருவிளக்கு வசதிகளை நிறுவனத்தார் அறிந்து மக்களுக்கு செய்து தரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் நேரிடையாக பெறப்பட்ட மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(பொ),
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருச்சி

மாவட்ட ஆட்சித்தலைவர்/
மாவட்ட நடுவர்
அரியலூர்.